மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், .திருவொற்றீயூர்

**OS.No. 42 / 2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருவிஸ்வநாத், இளநிலை உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி ரரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜுன் மாதம் 06 -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது,

தேதி - **06.06.2024**

பெயர் - முனுசாமி

த/பெ - துரைராஜ்

சாட்சி - DW 1

விசாரணை தொடங்கும் நேரம்:- **02.50 PM**

குறுக்கு விசாரணை- தொடர்ச்சி :-

9. என்னுடைய தாயார் திருமதி மாரியம்மாளின் இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை, மேலும் திரு ராஜு என்பவரின் இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தந்தை துரைராஜ் என்பவரின் இறப்பு சான்றிதல் மற்றும் வாரிசு சான்றினை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

10. என்னுடைய மூதாதையர்கள் பர்மாவிலிருந்து இங்கு வந்து குடியேறியதாக நான் குறிப்பிட்டுள்ளேன் அதற்கான அரசு ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. நான் குடியிருக்கும் இடத்திற்கான சர்வே எண் என்னவென்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் குடியிருக்கும் முகவரியான 81/16 அன்னை சிவகாமி நகர் கிராம பஞ்சாயத்துக்கு உட்பட்டது என்றாலும் அதனால் நான் அதற்கான வீட்டுவரியினை செலுத்தி அதன் ரசீதுகள் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை.

10. நான் குடியிருக்கும் என் வீட்டிற்கு கிராம பஞ்சாயத்தில் வீட்டுவரி செலுத்தி உள்ளேனா இல்லையா என்றால் நான் செலுத்தவில்லை. நான் குடியிருக்கும் இடத்திற்கு எனக்கு பட்டா உள்ளதா என்றால் என்னிடம் பட்டா இல்லை. அந்த ஊருக்கே பட்டா இல்லை. பர்மாவிலிருந்து வந்த துரைராஜ் மற்றும் மாரியம்மாள் தம்பதிகளுக்கு இந்த இடம் தான் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்காக ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை.

11. என்னுடைய இடத்திற்கான சொத்து பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் அந்த ஊர் கிராம தலைவரிடம் சென்று கேட்டால் அவர்கள் அதனை கொடுப்பார்கள். என்னுடைய பதிலுரையில் 6 வது பத்தியில் வழக்கு சொத்து எனக்கும் என்னுடைய சகோதரிக்கும் இடையே பாகம் பிரிக்கப்படடது என்று குறிப்பிட்டுள்ளேன் அந்த பாகம் எப்பொழுது யாருடைய முன்னிலையில் பிரிக்கப்பட்டது என்றால் ராமச்சந்திரன் என்பவர் அப்பொழுது கிராம செயலாளராக இருந்தார் அவர் முன்னிலையில் இந்த சொத்து பாகம் பிரிக்கப்ப்ட்டது.

12. சொத்து எந்த தேதியில் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் 2018 ஆம் ஆண்டு பாகம் பிரிக்கப்படடது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த பாகம் பிரித்தல் பத்திரமாக செய்யவில்லை. அந்த பாகப்பிரிவினை செய்தபோது யார்யார் அங்கு இருந்தார்கள் என்றால் என்னுடைய தந்தை, நான் மற்றும் மேற்சொன்ன ராமச்சந்திரன் ஆகியோர் அங்கு இருந்தோம்.

13.என்னுடைய பதிலுரையில் பாகம் பிரித்த போது கிராம சங்க நிர்வாகி மற்றும் அதன் உறுப்பினர்கள் அங்கு இருந்தாக நான் குறிப்பிட்டுள்ளேன் ஆனால் தற்பொழுது மேற்சொன்ன நாங்கள் முவர் மட்டுமே அங்கு இருந்தததாக முன்னுக்குப்பின் முரணாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி ராஜலட்சுமி எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் என்னுடைய அக்காவின் மகள் ஆவார். வாதி என்னுடைய அக்கா மற்றும் அவருடைய மகன் மற்றும் என்னுடைய விருப்பம் இல்லாமல் கோபி என்பவரை காதலித்து சாதிமறுப்பு திருமணம் செய்து கொண்டார் என்று சொன்னால் ஆமாம்.

14. வாதி எங்களுடைய விருப்பம் இல்லாமல் சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டதால் பிரதிவாதிகள் ஆகிய நாங்கள் மூவரும் வாதி மீது கோபமாக இருந்தோம் என்று சொன்னால் நாங்கள் கோபமாக இல்லை. வாதி எங்களுக்கு விருப்பம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டாலும் நான் முன்னின்று அவருடைய திருமணத்தை பதிவு செய்து கொடுதேன் என்று சொன்னால் இல்லை. நான் பதிவு செய்து கொடுக்கவில்லை. வழக்கு சொத்தில் வாதியை வாதியின் தாயார் தான் பாசத்தோடு அவரை குடியமர்த்தினர் என்று சொன்னால் இல்லை. ஏன்னென்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை அது பற்றி அவருக்கு தான் தெரியும்.

15. நான் தாக்கல் செய்த பதிலுரையில் 8 வது பத்தியில் பிரதிவாதி காளியம்மாள் தன்னுடைய மகளான வாதியை பாசத்தோடு தாவாசொத்திற்கு வர அனுமதித்தார் என்று நான்

குறிப்பிடுள்ளேன் என்று சொன்னால் இல்லை. என்னுடைய பதிலுரை நான் சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தாரா அல்லது வழக்கறிஞர் தயார் செய்த பிறகு நான் அதில் கையொப்பம் செய்தேனா என்றால் நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் அதனை தயார் செய்தார். என்னுடைய பதிலுரையில் உள்ள மொத்த விவரங்களும் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம்.

16. நான் தாக்கல் செய்த பதிலுரையில் 6 வது பத்தியில் என்னுடைய தந்தை துரைராஜ் என்பவர் 18.06.2012 அன்று இறந்துவிட்டார் என்றும் அவர் உயிரோடு இருந்தபோது பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். அந்த கால கட்டத்தில் என்னுடைய தந்தை உடல்நிலை சரியி ல்லாமல் இருந்தார் அதனால் கிராம தலைவரை வீட்டிற்கு அழைத்து பாகப்பிரிவினை செய்யப்பட்டது. அப்போதைய கிராம தலைவர் பெயர் என்னவென்றால் அவருடைய பெயர் வீரமுத்து. செயலாளர் பெயர் ராமச்சந்திரன்.

17. எவ்வித ஆவணமும் இல்லாமல் இச்சொத்தினை பாகம்பிரிக்கவோ அல்லது பாகம் பிரித்து எழுதவோ முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி எப்போது குடிவந்தார் என்று சொன்னால் அவர் குடிவரவில்லை தன்னுடைய தாயாரை பார்க்க அவர் அடிக்கடி அங்கு வருவார். நான் குடியிருந்த என்னுடைய சொத்தில் என்னை விரட்டி விட்டு வாதி இப்போது அங்கு குடியிருக்கிறார். எந்த தேதியில் வாதி என்னை விரட்டி விட்டு அங்கு குடிவந்தார் என்று சொன்னால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

18. என்னை வீட்டை விட்டு வாதி விரட்டிவிட்டார் என்று காவல் நிலையத்தில் நான் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் எண்ணூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். புகார் கொடுத்ததற்கான சி.எஸ்.ஆர் நகல் என்னிடம் உள்ளதா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய புகாரின் மீது என்னை அழைத்து காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்களா என்றால் சரியாக விசாரணை செய்யவில்லை. என்னுடைய புகார் மீதோ அல்லது என்னுடைய இடத்திற்காக நான் நீதிமன்றத்தில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை.

19. என்னை வாதி வீட்டை விட்டு விரட்டி விட்டார் என்றும் அதற்கு நான் கொடுத்த புகார் பற்றியும் என்னுடைய பதிலுரையில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு அது பற்றி ஞாபகம் இல்லை. எந்த வருடம் என்னை வீட்டை விட்டு விரட்டி விட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் குடியிருக்கும் முகவரி என்னவென்றால்

81/16 அன்னை சிவகாமி நகர், 2 வது தெரு எண்ணூர் சென்னை - 57

20. நான் பிறந்து வளர்ந்தது மேற்சொன்ன முகவரியிலா என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் 2 வீடுகள் உள்ளதா என்றால் ஆமாம். என்னுடைய வீட்டின் கதவு எண் என்னவென்றால் 81 /16 ஆகும். மற்றொரு வீட்டின் கதவுஎண் என்னவென்றால் அதன் கதவு எண்ணும் 81/16 ஆகும். அந்த காம்பவுண்டில் முன்புறம் ஒரு வீடும் பின்புறம் ஒரு வீடும் உள்ளது,. பின்புறம் உள்ள வீட்டில் நாங்கள் அனைவரும் குடியிருக்கிறோம் முன்புறம் உள்ள வீடு விருந்தினர்கள் தங்குவதற்காக உள்ளது. அந்த வீட்டில் தான் நான் தூங்குவேன் அங்கிருந்து தான் என்னை விரட்டிவிட்டார்கள்.

21. அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும் அதனால் தான் அதுபற்றி என்னுடைய பதிலுரையில் நான் அது பற்றி குறிப்பிட்ப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. விருந்தினர் தங்குவதற்காக கட்டப்பட்ட வீடு எப்போது கட்டப்பட்டது என்றால் அது ஓட்டு வீடாகும் அது கட்டப்பட்ட ஆண்டு 2021 ஆ அல்லது 2022 ஆண்டா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறெனில் அந்த வீடு கட்டப்பட்டு 3 அல்லது 4 ஆண்டுகள் தான் இருக்கும் என்றால் ஆமாம்.

22. வாதி ராஜலட்சுமி திருமணமான பிறகு எங்கள் வீட்டில் எங்கு தங்கியிருந்தார் என்றால் அவர் எங்கள் வீட்டில் தங்கியதே இல்லை. வாதி என் வீட்டில் தங்காததால் அவர் என்னை வீட்டை விட்டு வெளியேற்றிருக்க முடியாது என்று சொன்னால் அது தவறு அவர் தான் என்னை வீட்டை விட்டு வெளியேற்றினார். வாதி என்னை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டு 81/16 ஏ என்ற வீட்டில் குடியிருக்கிறார் என்று சொன்னால் ஆமாம். என்னை வெளியேற்றி விட்டுதான் அவர் அங்கு குடியிருக்கிறார். என்னை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டு வாதி ராஜலட்சுமி தன்னுடைய கணவர் கோபி மற்றும் குழந்தைகளோடு அங்கு குடியிருக்கிறார் என்று சொன்னால் ஆமாம்.

23. வாதியின் தாயார் தன் மகளை பாசத்தோடு பார்த்து அவருடைய பிரசவங்களை பார்த்தார் என்று சொன்னால் இல்லை. வாதி காதலித்து சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டதால் வாதியின் தாயார் அவருக்கு எந்தவித வசதிகளையும் செய்து தரவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

24. நான் என்னுடைய அக்கா மற்றும் அவருடைய மகன் ஆகியோர் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் போது வாதி பற்றி தற்போது கேட்ட விவரங்கள் எனக்கு தெரியாது என்று நான்

சொல்வது பொய் என்று சொன்னால் அது தவறு. அன்னை சிவகாமி நகரில் ஒரே காம்பவுண்டில் உள்ள வீட்டில் நான் குடியி ருக்கிறேன் என்று சொல்லிவிட்டு தற்பொழுது கேட்ட விவரங்கள் எனக்கு தெரியாது என்று நான் சொல்வது நான் அந்த வீட்டில் குடியில்லை என்று சொன்னால் அது தவறு. எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் எனக்கு திருமணம் ஆகவில்லை.

25. நான் என்ன படித்து இருக்கிறேன் என்றால் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேனன். 2 வது பிரதிவாத இமயவரம்பனுக்கு திருமணம் ஆகிவிட்டாதா என்றால் திருமணம் ஆகிவிட்டது. 2 ம் பிரதிவாதி என்ன படித்து இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது, அவர் மணைவி மற்றும் குழந்தைகளோடு அங்கு வாழ்ந்து வருகிறாரா என்றால் இல்லை. அந்த வீட்டில் கணவனை இழந்த என்னுடைய அக்கா திருமணமாகாத நான் மற்றும் விவாகரத்து பெற்ற என்னுடைய அக்காள் மகன் இமயவரம்பன் ஆகியோர் குடியிருந்து வருகிறோம் என்று சொன்னால் ஆமாம். என்னுடை அக்காவிற்கு உடல்நிலை சரியில்லை என்று சொன்னால் ஆமாம். என்னுடைய அக்காவிற்கு மனநிலை பாதிக்கப்பட்டு அதற்கான சிகிச்சை யினை எடுத்து வருகிறார் என்று சொன்னால் ஆமாம்.

26. எனது அக்காவிற்கு மனநிலை பாதிக்கப்பட்டு அதற்கான சிகிச்சை பெற்று வருவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யதுள்ளதாக ஞாபகம் உள்ளது. எத்தனை வருடமாக மனநலசிகிச்சை அவர் எடுத்து வருகிறார் என்றால் கடந்த 10 ஆண்டுகளாக மயிலாப்பூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது,)

<u>விசாரணை முடியும் நேரம்:</u>- 04.10 PM